## உயர்கல்வி கல்வி உதவி திட்டம் தொடர்பாக அடிக்கடி கேட்கபடும் கேள்விகள் மற்றும் அதற்கான பதில்கள்

1. கல்வி உதவித்தொகை திட்டம் என்றால் என்ன ?
   உதவித்தொகை என்பது ஒரு குறிப்பிட்ட அடிப்படையில் ஒரு மாணவருக்கு வழங்கப்படும் நிதி உதவி ஆகும், பாலினம், படிப்புத் துறை, இனம், மதம் மற்றும் மாற்று திறனாளி போன்ற பல தகுதி மற்றும் அளவுகோல்களின் அடிப்படையில் இருக்கலாம். உதவித்தொகை என்பது கடன் அல்ல என்பதால் திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை. மாணவர்கள் கல்வி கற்பதை ஊக்குவிற்பதற்காக அரசால் செயல் படுத்த படும் நல திட்டமே கல்வி உதவித்தொகை திட்டம் .

2. எந்தெந்த படிப்புகளுக்கு எல்லாம் கல்வி உதவித்தொகை கிடைக்கும்?
   இந்தியாவைப் பொறுத்தவரை UGC/ AICTE/-யால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து விதமான படிப்புகளுக்கும் கல்வி உதவித்தொகை வழங்க படும். டிப்ளமோ மற்றும் சான்றிதழ் படிப்புகளும் இதில் அடங்கும். வெளிநாடுகளில் உள்ள என அனைத்துப் படிப்பிற்கும் கல்வி உதவித்தொகை உண்டு,

3. பள்ளி அளவிலான போட்டி தேர்வின் ( எழுத்து தேர்வு) மூலம் பெறக்கூடிய கல்வி உதவித் தொகைகள் எவை ?

- தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்பு உதவித்தொகை ( NMMS) - 8ம் வகுப்பு படித்து கொண்டிருக்கும் மாணவர்களுக்கானது
- ஊரக திறனாய்வு தேர்வு (TRUST) - 9ம் வகுப்பு படித்து கொண்டிருக்கும் மாணவர்களுக்கானது
- தேசிய திறனாய்வு தேர்வு (NTSE )- 10ம் வகுப்பு படித்து கொண்டிருக்கும் மாணவர்களுக்கானது

4. தமிழ் நாடு அரசு வழங்கும் கல்வி உதவித்தொகை திட்டங்கள் எவை ?

   - பேரறிஞர் அண்ணா நினைவு பரிசு என்பது கல்வி உதவித்தொகை

   தொழிற்கல்வி (Professional courses )மேற்கொள்ளும் மாணவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் வழங்கப்படும் உதவித்தொகை ( பரிசு தொகை ) பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பு சார்ந்த 2 மாணவர் மற்றும் 2 மாணவியருக்கு 12வது வகுப்பு பொது தேர்வில் மாவட்ட அளவில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பெற்று இருத்தல் வேண்டும் என்பது இதற்கான தகுதி

   - தந்தை பெரியார் நினைவு பரிசு என்ற பெயரில்

   தொழில்நுட்ப கல்வி (Polytechnic College ) மேற்கொள்ளும் மாணவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் வழங்கப்படும் உதவித்தொகை ( பரிசு தொகை )

பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பு சார்ந்த 2 மாணவர் மற்றும் 2 மாணவியருக்கு 12வது வகுப்பு பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பெற்று இருத்தல் வேண்டும் என்பது அதற்கான தகுதி .

- இதே போல் அண்ணல் காந்தி நினைவு பரிசு என்ற பெயரில் 12வது வகுப்பு பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் முதலிடம் பெரும் ஆதிதிராவிடர் பிரிவை சார்ந்த 1 மாணவர் மற்றும் 1 மாணவி இப்பரிசை பெறுவர்

- மேலும் டாக்டர் அம்பேத்கர் தேசிய சிறப்பு உதவி தொகை என்ற பெயரில் 12வது வகுப்பு பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் முதல் மூன்று இடம் பெரும் ஆதிதிராவிடர் பிரிவை சேர்ந்தவர்கள் இப்பரிசை பெறுவர்

5. ஆதிதிராவிடர், பழங்குடியின,மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர், நரிக்குறவர் மற்றும் சிறுபான்மையின மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை திட்டங்கள் எவை ?

   ஆதிதிராவிடர், பழங்குடியின,மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர், நரிக்குறவர் மற்றும் சிறுபான்மையின மாணவர்களுக்கு கல்வி உதவி தொகை இனவாரியாக சார்ந்த துறை மூலம் தனி தனியாக வழங்கப்படுகின்றன . உதாரணமாக சில உதவிதொகை திட்டங்களின் பெயர்கள் :

   - இன வாரியாக கல்லூரி மாணவர்களுக்கான post metric உதவி தொகை
   - சிறுபான்மையினர் கல்லூரி மாணவர்களுக்கான post metric உதவி தொகை
   - இலவசக் கல்வித் திட்டம்
   - ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைக்கழகங்கள் போன்ற மத்திய அரசு நிறுவனங்களில் படிக்கும் மாணவர்களுக்கு உதவித்தொகை

6. ஆதிதிராவிடர், பழங்குடியின,மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர், நரிக்குறவர் மற்றும் சிறுபான்மையின,பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு மாவட்டங்களில் தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலகம் எது ?

   மாணவர்கள் ஆன்லைன் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம் மேலும் சந்தேகங்களுக்கு பயிலும் கல்லூரி அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் மற்றும் e சேவை மையத்தை தொடர்பு கொள்ளலாம்

7. ஆதிதிராவிடர், பழங்குடியின,மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர், நரிக்குறவர் மற்றும் சிறுபான்மையின,பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு உதவித்தொகை பெற தகுதி மற்றும் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் எவை?

   வகுப்பு சான்றிதழ், பெற்றோரின் ஆண்டு வருமான சான்றிதழ், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் , ஆதார் அட்டை , வங்கி கணக்கு புத்தக நகல்

8. ஆதிதிராவிடர், பழங்குடியின,மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர், சிறுபான்மையின,பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான உதவித்தொகை பெற எவ்வாறு விண்ணப்பிப்பது?

   ஆன்லைன் மூலமாக விண்ணப்பிக்கலாம் மற்றும் e சேவை மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்

9. ஆதிதிராவிடர், பழங்குடியின,மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர்,சிறுபான்மையின,பிற்படுத்தப்பட்டமாணவர்களுக்கான உதவித்தொகை கால அவகாசம் என்ன ?

   ஆதிதிராவிடர், பழங்குடியின,மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர்,சிறுபான்மையின,பிற்படுத்தப்பட்டமாணவர்களுக்கான உதவித்தொகை கால அவகாசம் என்பது துறை சார்ந்தும், ஒவ்வொரு கல்வி ஆண்டுக்கும் வேறு படும், இது தொடர்பான தகவல்களுக்கு துறை சார்ந்த இணைய தளங்களையோ அல்லது e சேவை மையத்தை அணுகலாம். மேலும் கல்வி பயிலும் கல்லூரி / கல்வி நிறுவங்களின் அலுவலகத்தையும் தொடர்பு கொள்ளலாம்.

10. ஒரு மாணவர் ஒன்றுக்கும் மேற்பட்ட திட்டங்களின் மூலம் கல்வி உதவி தொகையை பெற முடியுமா ?

    முடியாது,ஒரு மாணவர் ஒரே ஒரு திட்டத்தின் மூலமே கல்வி உதவி தொகை பெற இயலும்

11. முதல் தலைமுறை பட்டதாரி சான்றிதழ் எங்கே பெறுவது?

    மாணவரின் குடியிருப்பு பகுதிக்கான வட்டாட்சியர் அலுவலகம் / அலுவலர் மூலம் பெற வேண்டும்.

12. முதல் தலைமுறை பட்டதாரி உதவித்தொகை பெற தேவையான தகுதி மற்றும் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் எவை?

- மாணவரின் குடும்பத்தில் மூத்தவர்கள் (அண்ணன் / அக்கா) , பெற்றோர் மற்றும் பெற்றோரின் பெற்றோர் (தாய் வழி & தந்தை வழி ) என எவரும் கல்லூரி படிப்பு / பட்ட படிப்பு பெற்றிருத்தல் கூடாது

- வட்டாட்சியர் மூலம் பெறப்பட்ட முதல் தலைமுறை சான்றிதழ் இதற்கான ஆவணம் .

13. ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட குடும்ப உறுப்பினர்கள் முதல் தலைமுறை பட்டதாரி உதவித்தொகை பெற இயலுமா ?

பெற இயலாது .

14. முதல் தலைமுறை பட்டதாரி உதவித்தொகை எப்படி விண்ணப்பிப்பது ?

ஆன்லைன் / இணையதளம் மூலமாகவோ அல்லது இ சேவை மையம் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம்

15. முதல் தலைமுறை பட்டதாரி உதவித்தொகை பெறுவதற்கான கால அவகாசம் என்ன ?

கல்லூரியில் கலந்தாய்வு க்கு முன்னர் பெற்று இருப்பது சிறந்தது

16. பெண் குழந்தைகளுக்கான உதவித்தொகை திட்டங்கள் எவை ?

- பிரகதி திட்டம் (PRAGATI SCHOLARSHIP SCHEME FOR GIRLS STUDENT) மேலும் விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணைய தளத்தை தொடர்பு கொள்ளவும் https://www.aicte-pragati-saksham-gov.in/

- சக்சம் கல்வி உதவித்தொகை திட்டம் (SAKSHAM SCHOLARSHIP SCHEME FOR SPECIALLY ABLED STUDENT) பெண் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு என்று தனியாக உள்ளது .மேலும் விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணைய தளத்தை தொடர்பு கொள்ளவும் https://www.aicte-pragati-saksham-gov.in/
- பாதுகாப்பு ஆராய்ச்சி , மேம்பாட்டு அமைப்பு கல்வி உதவி தொகை திட்டம் (DRDO )

17. பெண் குழந்தைகளுக்கான உதவித்தொகை பெற தகுதி மற்றும் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் எவை?

பிரகதி திட்டம் உதவித்தொகைக்கு கீழ்கண்ட ஆவணங்கள் தேவை

- 10 மற்றும் 12 வது மதிப்பெண் சான்றிதழ்
- ஆண்டு குடும்ப வருமான சான்றிதழ் ( தாசில்தார் தரவரிசைக்கு கீழே இருக்க கூடாது
- மாற்று திறனாளி சான்றிதழ்
- தொழில்நுட்ப கல்வி இயக்குநரகத்தால் வழங்கபட்டசேர்க்கை பெற்றதற்கான கடிதம்
- இயக்குனர் / முதல்வர் / கல்வி நிறுவன தலைவர் வழங்கபட்ட சான்றிதழ்
- கல்வி கட்டணம் ரசீது
- ஆதருடன் இணைக்கபட்ட வங்கி கணக்கு அட்டை ( வங்கி கணக்கு எண் / IFSC / புகைபடம் உள்ளிட்ட விவரங்கள் அடங்கியது )
- வகுப்பு சான்றிதழ் ( SC/ST/OBC)
- ஆதார் அட்டை
- பெற்றோரின் உறுதி ஆணவம்

மேலும் விவங்களுக்கு https ://www .aicte.india.org இணையதளத்தை தொடர்பு கொள்ளவும்

சக்சம் கல்வி உதவித்தொகை உதவித்தொகைக்கு கீழ்கண்ட ஆவணங்கள் தேவை

- 10 மற்றும் 12 வது மதிப்பெண் சான்றிதழ்
- ஆண்டு குடும்ப வருமான சான்றிதழ் ( தாசில்தார் தரவரிசைக்கு கீழே இருக்க கூடாது
- தொழில்நுட்ப கல்வி இயக்குநரகத்தால் வழங்கபட்ட சேர்க்கை பெற்றதற்கான கடிதம்
- இயக்குனர் / முதல்வர் / கல்வி நிறுவன தலைவர் வழங்கபட்ட சான்றிதழ்
- கல்வி கட்டணம் ரசீது
- ஆதருடன் இணைக்கபட்ட வங்கி கணக்கு அட்டை ( வங்கி கணக்கு எண் / IFSC / புகைபடம் உள்ளிட்ட விவரங்கள் அடங்கியது )
- வகுப்பு சான்றிதழ் ( SC/ST/OBC)
- ஆதார் அட்டை
- பெற்றோரின் உறுதி ஆணவம்

மேலும் விவங்களுக்கு https ://www .aicte.india.org இணையதளத்தை தொடர்பு கொள்ளவும்

பாதுகாப்பு ஆராய்ச்சி , மேம்பாட்டு அமைப்பு கல்வி உதவி தொகை திட்டம் (DRDO ) பெற கீழ்கண்ட ஆவணங்கள் தேவை

- மாணவி இந்திய குடியிமை உள்ளவராக இருக்க வேண்டும்
- B. E/ B. Tech முதல் ஆண்டு சேர்க்கை பெற்றதற்கான கடிதம்
- JEE MAIN Exam ல் பெற்ற மதிப்பெண்

வருடத்திற்கு ரூபாய் 1,20,000 அல்லது ஆண்டு கல்வி கட்டணம் உதவி தொகையாக வழங்கபடும்.

ஆன்லைன் மூலம் மட்டுமே விண்ணபிக்க முடியும்.மேலும் விவரங்களுக்கு http://rac.gov.in & https://www.drdo.gov.in/aeronautics-research-development/about-us

18. விளையாட்டு வீரர்கள் ஒதுக்கீட்டிற்கான கல்வி உதவித்தொகை எவை ?
    - தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் வழங்கும் கல்வி உதவித்தொகை (SDAT Sports Scholarship Scheme)
    - தேசிய விளையாட்டு கல்வி உதவித்தொகை (National sports grants
    - தேசிய விளையாட்டு ஆணையம் உதவித்தொகை
    - இந்திய எண்ணெய் நிறுவன விளையாட்டு கல்வி உதவி தொகை ( INDIAN OIL SPORTS SCHOLARSHIP )
    - ONGC விளையாட்டு கல்வி உதவித்தொகை

19. விளையாட்டு வீரர்கள் ஒதுக்கீட்டிற்கான கல்வி உதவித்தொகை பெற தொடர்பு கொள்ள வேண்டிய இணைய தள ( Portal id ) முகவரி என்ன ?
    - தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் வழங்கும் கல்வி உதவித்தொகை (SDAT Sports Scholarship Scheme) - https://sdat.tn.gov.in/desc.php?id=20
    - https://yas.nic.in/sports/national-sports-development-fund-0
    - தேசிய விளையாட்டு கல்வி உதவித்தொகை (National sports grants )- https://yas.nic.in/sports/national-sports-development-fund-0
    - தேசிய விளையாட்டு ஆணையம் உதவித்தொகை - https://sportsauthorityofindia.gov.in/sai/
    - இந்திய எண்ணெய் நிறுவன விளையாட்டு கல்வி உதவி தொகை ( INDIAN OIL SPORTS SCHOLARSHIP ) http://www.iocl .com/aboutus /indianoilsports.aspx
    - ONGC விளையாட்டு கல்வி உதவித்தொகை
      https://ongcindia.com/web/eng/search?q=scholarship

20. மாற்றுத்திறனாளி மாணவர்கள்  ஒதுக்கீட்டிற்கான கல்வி உதவித்தொகை எவை ?

- மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு என தேசிய மாற்றுத்திறனாளி மாணவர் உதவித்தொகை திட்டம் உள்ளது , மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட இணையதளத்தை தொடர்பு கொள்ளவும் https://disabilityaffairs.gov.in/content/page/scholarship.php

- மேலும் அயல்நாடு சென்று பயில விரும்பும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு என்று " National Overseas Scholarship for Students with Disability " என்ற கல்வி உதவித்தொகை திட்டம் உள்ளது. மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட இணைய தளத்தை தொடர்பு கொள்ளவும்.https://www.education.gov.in/

- சக்சம் கல்வி உதவித்தொகை திட்டம் (SAKSHAM SCHOLARSHIP SCHEME FOR SPECIALLY ABLED STUDENT) மேலும் விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணைய தளத்தை தொடர்பு கொள்ளவும் https://www.aicte-pragati-saksham-gov.in/

21. மாற்றுத்திறனாளி மாணவர்கள் கல்வி உதவித்தொகை பெற தகுதி மற்றும் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள், எவை?

தகுதி : குறைபாட்டின் அளவு 40 % மேல் இருக்க வேண்டும்
50% ஒதுக்கீடு பெண் மாற்று திறனாளிகளுக்கானது
அயல் நாட்டு  கல்வி பயில 30% ஒதுக்கீடு பெண் மாற்று திறனாளிகளுக்கானது .மேலும் விவரங்களுக்கு கீழ் கண்ட இணைய தளங்களை தொடர்பு கொள்ளவும்

- https://disabilityaffairs.gov.in/content/page/scholarship.php
- https://nhfdc.nic.in/

22. மாற்று திறனாளி மாணவர்கள்  ஒதுக்கீட்டிற்கான கல்வி உதவித்தொகை பெற பெற எப்படி விண்ணப்பிப்பது ?

ஆன்லைன் / இணையதளம் மூலமாகவோ  அல்லது இ  சேவை மையம் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம்

23. தாய் / தந்தை விபத்தில் இறப்பு/ நிரந்தர  முடக்கம் அடைந்தமையால் பாதிக்கப்பட்ட  மாணவ / மாணவியருக்கு கல்வி உதவித்தொகை எவை ?

ருபாய் 75,000 /- கல்வி உதவி தொகை ( கல்வி பராமரிப்பு செலவினம் ) கிடைக்கும் , இது அந்த குடும்பத்தில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் ருபாய் 75,000 கிடைக்கும்

24. தாய் / தந்தை விபத்தில் இறப்பு/ நிரந்தர முடக்கம் அடைந்தமையால் பாதிக்கப்பட்ட மாணவ / மாணவியருக்கு கல்வி உதவித்தொகை பெற தகுதி மற்றும் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் எவை?

- விண்ணப்பம்
- உறுதியான சான்றிதழ் (bonafide certificate)
- இறப்பு சான்றிதழ்
- வாரிசு சான்றிதழ்
- ஆண்டு குடும்ப வருமான சான்றிதழ்
- பிரேத பரிசோதனை அறிக்கை
- முதல் தகவல் அறிக்கை
- குடும்ப அட்டை
- வங்கி கணக்கு புத்தகம்

25. தாய் / தந்தை விபத்தில் இறப்பு/ நிரந்தர முடக்கம் அடைந்தமையால் பாதிக்கப்பட்ட மாணவ / மாணவியருக்கு ஒதுக்கீட்டிற்கான கல்வி உதவித்தொகை பெற எப்படி விண்ணப்பிப்பது ?

தலைமை ஆசிரியரின் பரிந்துரையின் படி மாவட்ட கல்வி அலுவலர்க்கு விண்ணப்பிக்க முடியும்

26. 12 வது மதிப்பெண் அடிப்படையில் நல்ல மதிப்பெண் பெற்ற மாணவ / மாணவியருக்கான கல்வி உதவித்தொகை/ ஊக்க தொகை எவை ?

பேரறிஞர் அண்ணா நினைவு பரிசு என்பது கல்வி உதவித்தொகை/ ஊக்க தொகை தொழிற்கல்வி (Professional courses )மேற்கொள்ளும் மாணவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் வழங்கப்படும் உதவித்தொகை ( பரிசு தொகை ) பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பு சார்ந்த 2 மாணவர் மற்றும் 2 மாணவியருக்கு 12வது வகுப்பு பொது தேர்வில் மாவட்ட அளவில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பெற்று இருத்தல் வேண்டும் என்பது இதற்கான தகுதி

தந்தை பெரியார் நினைவு பரிசு என்ற பெயரில் தொழில்நுட்ப கல்வி (Polytechnic College ) மேற்கொள்ளும் மாணவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் வழங்கப்படும் உதவித்தொகை ( பரிசு தொகை ) பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பு சார்ந்த 2 மாணவர் மற்றும் 2 மாணவியருக்கு 12வது வகுப்பு பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பெற்று இருத்தல் வேண்டும் என்பது அதற்கான தகுதி

இதே போல் அண்ணல் காந்தி நினைவு பரிசு என்ற பெயரில் 12வது வகுப்பு பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் முதலிடம் பெரும் ஆதிதிராவிடர் பிரிவை சார்ந்த 1 மாணவர் மற்றும் 1 மாணவி இப்பரிசை பெறுவர்

மேலும் டாக்டர் அம்பேத்கர் தேசிய சிறப்பு உதவி தொகை என்ற பெயரில் 12வது வகுப்பு பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் முதல் மூன்று இடம் பெரும் ஆதிதிராவிடர் பிரிவை சேர்ந்தவர்கள் இப்பரிசை பெறுவர்

27. மத்திய பல்கலைக்கழகங்கள் / மத்திய கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ / மாணவியருக்கான கல்வி உதவித்தொகை எவை ?

- வகுப்பு / இன அடிப்படையில் இருக்கும் அனைத்து விதமான கல்வி உதவித்தொகை திட்டங்களும் கிடைக்கும்

- இந்திய எக்கு நிறுவனம் சார்பாக SAIL சார்பாக மத்திய கல்வி நிறுவனங்களில் (IIT ) பயிலும் மாணவ / மாணவியர்க்கு கல்வி உதவித்தொகை வழங்க படுகிறது, மேலும் விவரங்களுக்கு கீழ் கண்ட இணைய தளத்தை தொடர்பு கொள்ளலாம் https://sail.co.in/en/corporate-citizenship/education

28. வெளிநாட்டில் பயிலும் மாணவ / மாணவியருக்கான கல்வி உதவித்தொகை எவை ?

நீங்கள் கல்வி பயில விரும்பும் நாடுகளுக்குரிய கீழ்க்கண்ட இணைய தளங்களை தேர்வு செய்து கொள்ளவும் :

★ Chevening Scholarship: Foreign & Commonwealth Office (UK)
★ China Scholarship Council Scholarship: Government of China
★ Commonwealth Scholarship: Commonwealth governments
★ Coca-Cola Scholarship: the Coca-Cola Company
★ Endeavour Awards: Government of Australia
★ Erasmus Mundus: European Union
★ Fulbright Scholarship
★ Gates Cambridge Scholarship: Bill & Melinda Gates Foundation; University of Cambridge
★ Jardine Scholarship: Jardine Matheson; Universities of Oxford and Cambridge
★ Marshall Scholarship: UK universities

★ Mitchell Scholarship: US-Ireland Alliance
★ Morehead-Cain Scholarship: University of North Carolina
★ Foundation Scholarship: Trinity College Dublin
★ Rhodes Scholarship: University of Oxford
★ Schwarzman Scholars: Tsinghua University

29. பொதுத்துறை நிறுவனங்கள் (Public Sector) வழங்கும் கல்வி உதவித்தொகை எவை ?

- சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் கல்வி உதவித்தொகை
- இந்திய எண்ணெய் கார்ப்பரேஷன் நிறுவன கல்வி உதவித்தொகை
- பாரத பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் கல்வி உதவித்தொகை
- ONGC கல்வி உதவித்தொகை
- SAIL கல்வி உதவித்தொகை
- எல்ஐசி பொன் விழா கல்வி உதவித்தொகை போன்றவை

30. பொதுத்துறை நிறுவனங்கள் (Public Sector) வழங்கும் கல்வி உதவித்தொகை தொடர்பான தகவல்களுக்கு கீழ்கண்ட இணைய தளங்களை அணுகலாம்

- https://iocl.com/chennai-petroleum-corporation-limited
- https://iocl.com/Scholarships
- https://entrance-exam.net/bharat-petroleum-corporation-scholarship/
- https://ongcindia.com/web/eng/search?q=scholarship
- https://licindia.in/Bottom-Links/Golden-Jubilee-Foundation/Scholarship

31. அரசு சாரா அமைப்பு/ தன்னார்வ அமைப்புகள் (NGOs) வழங்கும் கல்வி உதவித்தொகைஎவை ?

- மாற்றம் அறக்கட்டளை
- நார்த் சவுத் அறக்கட்டளை :
- ஷீட்ஸ்
- ஹோப் 3
- ஜெய்கோபால் கரோடியா
- அகரம் அறக்கட்டளை
- K C மஹிந்திரா கல்வி உதவி தொகை திட்டம் :
- முகவரி அறக்கட்டளை :
- ஆனந்தம் அறக்கட்டளை :
- முகவரி அறக்கட்டளை :

- குட் ஹார்ட்
- ராமகிருஷ்ணா மிஷன்
- டீம் எவரெஸ்ட்
- *Bright future for blind*
- கலோரி அண்ட் லவ்லி கல்வி உதவி தொகை திட்டம்

32. அரசு சாரா அமைப்பு/ தன்னார்வ அமைப்புகள் (NGOs ) வழங்கும் கல்வி உதவித்தொகை பெற மாவட்டங்களில் தொடர்பு கொள்ள வேண்டிய இணைய முகவரி எது ?

| | |
|---|---|
| மாற்றம் அறக்கட்டளை | https://www.maatramfoundation.com/ |
| நார்த் சவுத் அறக்கட்டளை: | https://www.northsouth.org/public/IndiaScholarships/Scholarships |
| ஷீட்ஸ் | https://www.seeeds.org/ |
| ஹோப் 3 | https://www.hope3.org/ |
| ஜெய்கோபால் கரோடியா : | https://www.scholarshipsinindia.com/jaigopal.html |
| அகரம் அறக்கட்டளை | www.agaram.in |
| K C மஹிந்திரா கல்வி உதவி தொகை திட்டம் | https://www.kcmet.org/what-we-do-Scholarship-Grants.aspx |
| முகவரி அறக்கட்டளை | https://guidestarindia.org/Summary.aspx?ccreg=4957 |
| டீம் எவரெஸ்ட் | https://www.everestscholarship.com/ |
| கலோரி அண்ட் லவ்லி கல்வி உதவி தொகை திட்டம் | https://www.glowandlovelycareers.in/en/scholarship-for-women |
| ஆனந்தம் அறக்கட்டளை | https://www.anandham.org/ |
| குட் ஹார்ட் | https://goodheartcf.com/ |
| Bright future for blind | https://www.bfob.in/ |
| ராமகிருஷ்ணா மிஷன் | http://rkmv.edu.in/scholarships-and-merit-awards/ |

33. 7.5 % இட ஒதுக்கீடு திட்டம் என்பது ஒரு வகையான கல்வி உதவித்தொகையா ?

ஆம், தொழிற்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை முன்னுரிமை யோடு கூடிய கல்வி சலுகை

34. 7.5 % இட ஒதுக்கீடு திட்டம் தொடர்பான கல்வி உதவித்தொகை பெற எப்படி விண்ணப்பிப்பது ?

EMIS இணையதளத்தில் மாணவரின் தகுதியை அப்பள்ளி நிர்வாகமே மேற்கொள்கிறது

35. உதவித்தொகையில் சேர்க்கப்படும் மாணவ / மாணவியருக்கான பெற்றோர் ஆண்டு வருமான உச்சவரம்பு ஏதேனும் உள்ளதா?

ஆம் , மாணவர் சார்ந்த இனத்திற்கு ஏற்றவாறு தீர்மானிக்க படுகிறது.

36. தனியார்/நிகர்நிலை பல்கலைக்கழகங்களில் (மத்திய அல்லது மாநில அரசால் நிதி அளிக்கப்படாத) மாணவர்கள் கல்வி உதவித்தொகை விண்ணப்பிக்க தகுதி உடையவர்களா?

ஆம் , அரசு அல்லது பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட எவ்வகை நிறுவனங்களில் பயின்றாலும் கல்வி உதவி தொகைக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்.

37. மாணவர்கள் சேர்க்கை ஆண்டில் எப்போது வேண்டுமானாலும் கல்வி உதவித்தொகை விண்ணப்பிக்க முடியுமா?
ஒரு குறிப்பிட்ட கல்வி நிறுவனத்தில் சேர்ந்த பிறகு , கல்வி நிறுவன நிர்வாகம் அறிவுறுத்தலின் பேரில் விண்ணப்பிக்கலாம்

ஒவ்வொரு கல்வி உதவி தொகைக்கும் விண்ணப்பிக்க ஒரு குறிப்பிட்ட கால அவகாசம் உண்டு அந்த குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் விண்ணப்பிக்கலாம்

38. மாணவர்கள் கல்வி உதவித்தொகை மற்றும் கல்விக் கடனை ஒன்றாகப் பெற முடியுமா?
ஆம்,கல்வி உதவித்தொகை மற்றும் கல்விக் கடனை ஒன்றாகப் பெற முடியும் .

39. ஒரு மாணவர் கல்வி உதவி தொகை ( Scholarship )மற்றும் கல்வி ஊக்கத்தொகை (Incentive ) இரண்டையும் ஒரு சேர பெற முடியுமா ?
ஆம், கல்வி உதவித்தொகை மற்றும் கல்வி ஊக்கத்தொகை இரண்டையும் ஒன்றாக பெற முடியும் .

40. வங்கிகள் ஏதாவது உதவித்தொகை வழங்குகின்றனவா ?

ஊக்கத்தொகை / உதவித்தொகை வழங்குகின்ற சில வங்கிகள் உள்ளது . உதாரணமாக கனரா வங்கியின் வித்யா - ஜோதி திட்டம் உள்ளது. அதன் இணையதள முகவரி இணைக்க பட்டுள்ளது .

https://csrbox.org/India_CSR_Project_Canara-Bank-Canara-Vidya-Jyothi-scheme-Uttar-Pradesh_555

41. மாணவர்களுக்கு உதவித்தொகை பெற முடியாததற்கான / விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கான பொதுவான காரணங்கள் என்ன?

கல்வி உதவித்தொகை பெறுவதற்கான சரியான ஆவணங்களை (Supporting documents ) சமர்ப்பிக்காமல் இருத்தலே முதன்மை காரணம்.
பெற்றோரின் ஆண்டு வருமானம் முக்கிய காரணியாக இடம் பெறும் திட்டங்கள் பெற்றோரின் ஆண்டு வருமானம் நிர்ணயிக்கப்பட்ட தொகையை விட அதிகமாக இருத்தல் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கான ஒரு காரணம் .

42. கல்வி உதவித்தொகை பற்றி தெரிந்துகொள்ள ஏதேனும் இணைய தளம் உள்ளதா ?

தேசிய அளவில் (National Schlorship Portal ) உள்ள இணைய தள முகவரி : https://scholarships.gov.in/

43. பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்களுக்கு என்று ஏதேனும் கல்வி உதவித்தொகை திட்டங்கள் உள்ளதா ?

அணைத்து விதமான கல்வி உதவித்தொகை திட்டங்களும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்களுக்கு
பொருந்தும். பெற்றோரின் ஆண்டு வருமானம் ஒரு முக்கிய காரணியாக உள்ளது.

44. இடைநிற்றல் மாணவர்களுக்கு ஏதேனும் உதவித்தொகை / ஊக்க தொகை கிடைக்குமா?

பள்ளி அளவில் 10வது , 11வது மற்றும் 12 வது பயிலும் மாணவர்களுக்கு இடைநிற்றலை தவிர்ப்பதற்காக ஊக்கத்தொகை 12வது முடித்த பிறகு மாணவரின் வங்கி கணக்கில் ஊக்கத்தொகை வரவு வைக்கப்படும்.

45. பாதுகாப்புத் துறையில் பணிபுரிபவர்களின் குழந்தைகளுக்கு ஏதேனும் சிறப்புச் சலுகை / கல்வி உதவித்தொகை திட்டங்கள் உள்ளதா?

- மத்திய துணை இராணுவ படையில் பணிபுரிபவரின் வாரிசுக்கு களுக்கு ரூ 15,000 முதல் ரூ 18,000/- உதவித்தொகை வழங்கப்படுகிறது.மேலும் விவரங்களுக்கு www .scholarship .in இணையதளத்தை தொடர்பு கொள்ளவும்.

- பிரதம மந்திரியின் சிறப்பு உதவித்தொகை திட்டம் உள்ளது மேலும் விவரங்களுக்கு http //www.desw.gov.in என்ற இணையதளத்தை தொடர்பு கொள்ளவும்

46. தமிழ்நாடு காவல்துறையில் பணிபுரிபவர்களின் குழந்தைகளுக்கு சிறப்புச் சலுகை / கல்வி உதவித்தொகை திட்டங்கள் உள்ளதா?
தமிழ்நாடு காவல்துறையில் பணிபுரிபவர்களின் குழந்தைகளுக்கு
- TAMIL NADU POLICE CENTENARY SCHOLARSHIP FUND
- TAMIL NADU GOVERNMENT SPECIAL SCHOLARSHIP FUND என்ற இரண்டு சிறப்புச் சலுகை / கல்வி உதவித்தொகை திட்டங்கள் உள்ளது. மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட இணைய தளத்தை தொடர்க்கு கொள்ளலாம் https://eservices.tnpolice.gov.in/CCTNSNICSDC/Welfare

47. இந்தியன் ரயில்வே துறையில் பணிபுரிபவர்களின் குழந்தைகளுக்கு ஏதேனும் சிறப்புச் சலுகை / கல்வி உதவித்தொகை திட்டங்கள் உள்ளதா?
இந்தியன் ரயில்வே துறையில் பணிபுரிபவர்களின் குழந்தைகளுக்கு Prime Minister's Scholarship Scheme for the wards of RPF/RPSF என்ற கல்வி உதவி தொகை திட்டம் உள்ளது .மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட இணைய தளத்தை தொடர்க்கு கொள்ளலாம். https://scholarships.gov.in/